மூலமாகவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து, ஒரே நேரத்திலே முடித்துக் கொடுக்கக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்படுமானால், வயதான காலத்திலே கஷ்டப் படாமல் அந்த ஓய்வூதியத்தைப் பெறுகிற சூழ்நிலை உருவாகும். சில இடங்களில் நாங்களே நேரிடையாக அழைத்துச் சென்று பெற்றுத்தர வேண்டிய அளவிற்கு விவரம் அறியாத வயோதிகர்களுக்கு......

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பழனிசாமி, முதியோர் உதவி சாங்ஷன் செய்வது சமூக நலத்துறையிலே இல்லை, அது வருவாய்த் துறையிடம் இருக்கிறது.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதியோர் உதவித் தொகைக்கான நிதி ஒதுக்கீட்டை சமூகநலத் துறை செய்வதால், நிச்சயமாக இதைப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

559—

புவனகிரி தாமரைக்குளம் தெருவிலுள்ள சத்துணவுக் கூடத்திற்குக் கட்டிடம்

* 16377 —செல்வி கோ. மல்லிகா:

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி பேரூராட்சியில் தாமரைக்குளத் தெருவிலுள்ள சத்துணவுக் கூடத்திற்குக் கட்டிடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொதுமக்கள் நன்கொடை மூலமும், அரசு ஏற்கனவே ஒதுக்கியுள்ள தொகைகள் மூலமும் அவசியப்படும் அபிவிருத்திகளைச் செய்துகொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.